ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 18.03.2015

## நாணயக் கொள்கை மீளாய்வு – 2015 மாச்சு

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் அண்மையில் வெளியிட்ட தரவிற்கிணங்க, 2014இல் இலங்கைப் பொருளாதாரம் 2013இன் 7.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.4 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சியானது முக்கியமாக கைத்தொழில் துறையின் 11.4 சதவீத வளர்ச்சி மற்றும் பணிகள் துறையின் 6.5 சதவீத வளர்ச்சியினால் உதவப்பட்டது. அதேவேளை, பாதகமான காலநிலை நிலைமைகளினால் பாதிப்புற்ற வேளாண்மைத் துறை 0.3 சதவீதம் கொண்ட சிறிதளவான வளர்ச்சியினைப் பதிவு செய்தது. முன்னோக்கிப் பார்க்கையில், 2015இல் பொருளாதாரம் நீடித்த தாழ்ந்த மற்றும் வலுவான பணவீக்கம் அத்துடன் வியாபார நம்பிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் என்பனவற்றிற்கு மத்தியில் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2015 பெப்புருவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் முதன்மைப் பணவீக்கம், முன்னைய மாதத்தின் 3.2 சதவீதத்திலிருந்து 0.6 சதவீதத்திற்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்து 2015 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்ட குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்களின் கீழ் நோக்கிய விலைத் திருத்தங்கள் மற்றும் உள்நாட்டு எரிபொருள் விலைகளின் கீழ் நோக்கிய திருத்தங்களைப் பிரதிபலிக்கின்றது. அத்தகைய வழிமுறைகளின் தாக்கம் மற்றும் மேம்பட்ட வழங்கல் நிலைமைகளினால் உதவப்பட்டமை என்பவற்றினைக் கருத்திற் கொள்கையில் 2015இல் குறிப்பாக முதலரைப் பகுதியில் முதன்மைப் பணவீக்கம் குறைவான மட்டங்களில் பேணப்படக் கூடியதாகக் காணப்படும் போல் தெரிகிறது. அதேவேளை, மையப் பணவீக்கம் 2015 பெப்புருவரியில் பொருளாதாரத்தில் காணப்பட்ட கேள்வி அழுத்தங்கள் குறைவடைந்தமையினைப் பிரதிபலிக்கினற விதத்தில் 2015 சனவரியின் 2.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 0.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

நடைமுறைக் கணக்கிற்கும் அதேபோன்று சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்குமான தொடர்ச்சியான வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல் காரணமாக வெளிநாட்டுத் துறை மீளெழுச்சியடைந்தது. 2015இன் எஞ்சிய காலப்பகுதியில், வெளிநாட்டுத் துறையானது இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட எதிர்பார்க்கப்பட்ட குறைப்பு, சுற்றுலாத் துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் பேரில் ஏற்பட்ட அதிகளவு உட்பாய்ச்சல்கள் மற்றும் அரசாங்கம், வங்கித்தொழில் துறை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளுக்கான பெறுகைகள் என்பவற்றுடன் சேர்ந்து மேலும் வலுவடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

2015 சனவரியில் வர்த்தக வங்கிகளிடமிருந்து தனியார் துறை பெற்றுக்கொண்ட கொடுகடன் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 11.5 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், உண்மை நியதிகளில், இம்மாத காலப்பகுதியில் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்கள் ரூ.21 பில்லியன் பெறுமதியினைக் கொண்டிருந்தன. வர்த்தக வங்கிகளிடமிருந்தான தனியார் துறைக்காக கொடுகடன், குறைவான சந்தை வட்டி வீதங்கள் மற்றும் அதிகரித்த வியாபார நம்பிக்கைகளிலிருந்து நன்மையடைந்தமையால் வளர்ச்சி உத்வேகம் நிலைத்திருக்கக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் உட்பட அதிகரித்த உள்நாட்டுக் கொடுகடன் விரிவாகத்தின் உதவியுடன் 2015 சனவரியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையிலான விரிந்த பண வளர்ச்சி 12.6 சதவீதமாகக் காணப்பட்டது.

தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்களில் காணப்பட்ட நிலைத்திருக்கக்கூடிய அதிகரிப்பினைக் கவனத்தில் கொண்டு இலங்கை மத்திய வங்கி, திறந்த சந்தை நடவடிக்கைப் பங்கேற்பாளர்கள் துணைநில் வைப்பு வசதியைப் பெறுவதில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்பாடுகள் 2015 மாச்சு 02 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நீக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, ஓரிரவு வட்டி வீதங்கள் மேல் நோக்கி நகர்த்தப்பட்டு கொள்கை வட்டி வீச்சின் கீழ் எல்லைக்கு அண்மித்ததாக அமைக்கப்பட்டது. குறிப்பிட்ட சில சந்தைப் பிரிவுகளில் வட்டி வீதங்கள் மேல் நோக்கி நகர்வடைந்த போதிலும் பொருளாதாரத்தின் தற்போதைய குறைந்த பணவீக்க மட்டங்களிலிருந்து நன்மையளிக்கும் வகையில் குறைந்த வட்டி வீதச் சூழல் தொடர்ந்தும் எதிர்பார்க்கப்படுகின்றதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளிற்கு தூண்டுதலளிக்கின்றது.

பொருளாதாரத்தில் மேற்கூறப்பட்ட அபிவிருத்திகளைக் கவனத்தில் கொண்ட நாணயச் சபை 2015 மாச்சு 17ஆம் நாளன்று நடைபெற்ற அதன் கூட்டத்தில் தற்போதைய நாணயக் கொள்கை நிலை பொருத்தமானது என்ற நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தது. இதன்படி, மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் என்பவற்றினை அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 6.50 சதவீதம் மற்றும் 8.00 சதவீதத்தில் மாற்றமின்றிப் பேணுவதெனத் தீர்மானித்தது.

நாணயக் கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை வெளியிடப்படும் திகதி காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும்.

| **நாணயக் கொள்கைத் தீர்மானம்:** | **கொள்கை வீதங்கள் மாற்றமடையவில்லை** |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 6.50% |
| துணைநில் கடன் வழங்கல் வசதி வீதம் | 8.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 6.00% |